ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020.12.28 |


# இலங்கை சுபீட்சச் சுட்டெண் – 2019

## தேசிய சுபீட்சம்

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணானது[1] "பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல்" மற்றும் "சமூக-பொருளாதார உட்கட்டமைப்பு" ஆகிய துணைச் சுட்டெண்களின் சிறிதளவான வீழ்ச்சிகளுடன் 2018இன் 0.811 உடன் ஒப்பிடுகையில் 2019இல் 0.802 ஆகப் பதிவாகியது. அதேவேளை, "மக்கள் நலனோம்புகை" துணைச் சுட்டெண் ஆண்டுகாலப்பகுதியில் மேம்பட்டுள்ளது.

| | 2018 | 2019 |
|---|---|---|
| ***இலங்கை சுபீட்சச் சுட்டெண்*** | ***0.811*** | ***0.802*** |
| ***துணைச் சுட்டெண்கள்*** | | |
| *பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல்* | *0.891* | *0.784* |
| *மக்கள் நலனோம்புகை* | *0.554* | *0.688* |
| *சமூக-பொருளாதார உட்கட்டமைப்பு* | *0.989* | *0.934* |

**வரைபடம் 1: இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்களின் அசைவுகள் 2015 - 2019**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

சுற்றுலா மற்றும் தொடர்புபட்ட கைத்தொழில்கள் மீது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் கசிவுத் தாக்கங்கள் தொழிலின்மையில் அதிகரிப்பொன்றினை ஏற்படுத்தியமை அத்துடன் 2019இன் பிந்திய பகுதியை நோக்கிய மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக ஒப்பீட்டளவில் உயர்வான பணவீக்கம் என்பன பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்ணில் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் பாதுகாப்பு பற்றிய கரிசனைகளின் காரணமாக பொதுப் போக்குவரத்தினைக் குறைவாகப் பயன்படுத்தியமை சமூக-பொருளாதார உட்கட்டமைப்புச் சுட்டெண்ணில் வீழ்ச்சிக்கு முக்கிய ஏதுவாக அமைந்தது.

மக்களின் கல்வி, சுகாதார வசதிகள், செல்வம் தொடர்பான தரம் பற்றிய அம்சங்கள் மக்கள் நலனோம்புகைச் சுட்டெண்ணின் அதிகரிப்பிற்கு முக்கியமாக பங்களித்தவையாக விளங்கின.

**வரைபடம் 2: இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் உள்ளடக்கப்படும் அம்சங்கள்**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

[1] இலங்கை சுபீட்சச் சுட்டெண் என்பது நாட்டின் சுபீட்ச மட்டத்தினை அளவிடுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கூட்டுக் குறிகாட்டியாகும். இச்சுட்டெண் சுபீட்சத்தின் வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ள 41 மாறிகளினால் அளவிடப்பட்டவாறான பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்களின் நலனோம்புகை மற்றும் சமூக-பொருளாதார உட்கட்டமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

## மாகாண ரீதியான சுபீட்சம்

மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்ணின் உயர்வான பெறுமதியுடன் மேல் மாகாணம் முன்னிலை வகித்த அதேவேளை தென் மற்றும் மத்திய மாகாணங்கள் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளுக்கு தரப்படுத்தப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வட மத்திய மாகாணமானது மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்ணில் உயர்வான அதிகரிப்பினைப் பதிவுசெய்து அதனைத் தொடர்ந்து கிழக்கு மற்றும் மேல் மாகாணங்கள் காணப்பட்டன.

வரைபடம் 3- மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்கள்:2018 - 2019




அட்டவணை 1: மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்கள் மற்றும் மாகாண நிலைகள்

| | சுபீட்சச் சுட்டெண் | | மாகாண நிலை | |
|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2018 | 2019 |
| மத்திய | 0.438 | 0.386 | 3 | 3 |
| கிழக்கு | 0.087 | 0.107 | 8 | 8 |
| வட மத்திய | 0.220 | 0.249 | 7 | 7 |
| வட மேல் | 0.406 | 0.373 | 4 | 4 |
| வடக்கு | 0.305 | 0.310 | 5 | 5 |
| சப்பிரகமுவ | 0.281 | 0.254 | 6 | 6 |
| தென் | 0.533 | 0.458 | 2 | 2 |
| ஊவா | 0.083 | 0.025 | 9 | 9 |
| மேல் | 1.597 | 1.615 | 1 | 1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## மாகாண ரீதியான சுபீட்ச துணைச் சுட்டெண்களின் செயலாற்றும்

### பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்

கிழக்கு, வட மத்திய, வடக்கு மற்றும் ஊவா மாகாணங்கள், முறைசாராத் துறை சம்பளங்களில் அதிகரிப்பு மற்றும் அதிகரித்த முறைசார்ந்த தொழில்நிலை என்பன மூலம் துணைச் சுட்டெண்ணில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்துள்ளன. ஏனைய மாகாணங்களில் துணைச் சுட்டெண்கள் சீர்குலைவதற்கு தொழில்நிலையில் வீழ்ச்சி மற்றும் உயர்வான பணவீக்க மட்டங்கள் ஆகியன முக்கிய காரணங்களாக அமைந்தன.

### மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்

தென் மாகாணம் தவிர அனைத்து மாகாணங்களிலும் துணைச் சுட்டெண் மேம்பட்டது. இதற்கு மக்களின் சுகாதாரம், கல்வி மற்றும் வாகன உரிமை மற்றும் சிறப்பு அங்காடிகளுக்கான அதிகரித்த அணுகுவழி காணப்படுகின்ற செல்வம் ஆகிய அம்சங்களில் மேம்பாடுகள் முதன்மைக் காரணங்களாக அமைந்தன. அதேவேளை, தென் மாகாணத்தில் துணைச் சுட்டெண்ணின் சிறிய சீர்குலைக்கு சுற்றாடல், பொழுதுபோக்கு, கல்வி போன்ற அம்சங்களின் குறைவடைந்த மட்டங்கள் முக்கிய காரணமாக அமைந்தன.

### சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்

வீதி வலையமைப்பு, மின்சாரம் கிடைக்கப்பெறும் தன்மை, மேம்பட்ட குற்ற நடவடிக்கைகளற்ற சூழல் போன்றவற்றுக்கான மேம்பாடுகளுடன் தென் மற்றும் மேல் மாகாணங்கள் துணைச் சுட்டெண்ணில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. ஊவா மாகாணத்திலிருந்து உயர்வான வீழ்ச்சி பதிவாகியமையுடன் சேர்த்து ஏனைய மாகாணங்களின் துணைச் சுட்டெண் வீழ்ச்சிக்கு போக்குவரத்து மற்றும் பாதுகாப்பான குடிநீர் கிடைக்கப்பெறும் தன்மை போன்றவற்றின் குறைவடைந்த மட்டங்கள் முக்கிய காரணமாக அமைந்தன.

அட்டவணை 2: மாகாண ரீதியான சுபீட்ச துணைச் சுட்டெண்கள்[2]

| | 2018 | 2019 |
|---|---|---|
| **பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்** | | |
| மத்திய | 0.453 | 0.348 |
| கிழக்கு | 0.127 | 0.146 |
| வட மத்திய | 0.411 | 0.532 |
| வட மேல் | 0.542 | 0.467 |
| வடக்கு | 0.359 | 0.463 |
| சப்பிரகமுவ | 0.333 | 0.151 |
| தென் | 0.518 | 0.212 |
| ஊவா | 0.134 | 0.197 |
| மேல் | 1.860 | 1.829 |
| **மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்** | | |
| மத்திய | 0.157 | 0.176 |
| கிழக்கு | -0.075 | -0.028 |
| வட மத்திய | 0.224 | 0.253 |
| வட மேல் | 0.338 | 0.365 |
| வடக்கு | 0.236 | 0.241 |
| சப்பிரகமுவ | 0.287 | 0.369 |
| தென் | 0.499 | 0.490 |
| ஊவா | -0.091 | -0.047 |
| மேல் | 1.163 | 1.198 |
| **சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்** | | |
| மத்திய | 0.703 | 0.636 |
| கிழக்கு | 0.210 | 0.204 |
| வட மத்திய | 0.026 | -0.038 |
| வட மேல் | 0.336 | 0.287 |
| வடக்கு | 0.319 | 0.226 |
| சப்பிரகமுவ | 0.224 | 0.242 |
| தென் | 0.583 | 0.671 |
| ஊவா | 0.207 | -0.075 |
| மேல் | 1.769 | 1.819 |

[2] சுட்டெண் பெறுமானங்கள், கடந்த 10 வருடங்கள் தொடர்பில் ஒவ்வொரு மாறியினையும் தரப்படுத்துவதன் மூலம் தொகுக்கப்படுகின்றன. எனவே, சுட்டெண் பெறுமதி ஒன்றின் அடையாளமானது தொடர்புடைய சராசரியுடன் ஒப்பிட்டு அதன் சாதகமான அல்லது பாதகமான மாறுபடுதலினை உணர்த்துகின்றது. இதனால் சுட்டெண்ணின் எதிர்மறையான பெறுமானங்கள் சுபீட்ச மட்டங்கள் எதிர்மறையாகக் காணப்படுகின்றன என்பதைக் குறிப்பிடுவதில்லை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுபீட்சச் சுட்டெண்**

சுபீட்சச் சுட்டெண், 41 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டிருப்பதுடன் மூன்று துணைச் சுட்டெண்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களும் சுபீட்சச் சுட்டெண்ணில் சமமான நிறையினைக் கொண்டிருக்கின்றன.

பொருளாதார வியாபார சூழல் துணைச் சுட்டெண்ணானது விலை உறுதிப்பாடு, வாழ்க்கைத்தரம், வருமானம், வறுமை, தொழில்நிலை, கைத்தொழில் அடர்த்தி மற்றும் வங்கித்தொழில் அடர்த்தி ஆகிய வகைகளாக்கப்பட்ட 9 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்படுகிறது. மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்ணைத் தொகுக்கும் போது சுகாதாரக் கவனிப்பு வசதிகள் கிடைக்கும்தன்மை, கல்வி வசதிகள் கிடைக்கும்தன்மை மற்றும் தரம், செல்வம், பொழுதுபோக்கு வசதிகள் கிடைக்கும்தன்மை மற்றும் பயன்பாடு, வளியின் தரம் மற்றும் சூழலின் சுத்தமான தன்மை என்பன தொடர்பான 22 மாறிகளை உள்ளடக்கித் தொகுக்கப்படுகிறது. சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் 10 மாறிகளை உள்ளடக்கி இருப்பதுடன் அவை தொடர்பான அம்சங்களாக போக்குவரத்து வசதிகளின் கிடைக்கும்தன்மை, வீதி உள்ளடக்கம் கிடைக்கும்தன்மை, தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகள் கிடைக்கும்தன்மை, மின்வலு கிடைக்கும்தன்மை, பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடிநீர் வசதிகளின் கிடைக்கும்தன்மை, சுகாதாரம் கிடைக்கும்தன்மை, குற்றச்செயலற்ற சூழல் என்பன காணப்படுகின்றன.

**முறையியல்**

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுப்பதில் பயன்படுத்தப்பட்ட மாறிகள் அளவீட்டின் பல்வேறுபட்ட அலகுகளின் வடிவில் காணப்படுகின்றன. ஆகவே, கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட தரவுகளை தரப்படுவதன் மூலம் பொதுவான அளவு ஒன்றிற்கு இவ்வனைத்து மாறிகளும் மாற்றியமைக்கப்படுகின்றன. நாடு மற்றும் மாகாணங்களுக்கான சுட்டெண் பெறுமதிகள் தனித்தனியாக தொகுக்கப்படுவதனால் மாகாண ரீதியான சுட்டெண்களை தேசிய மட்டத்தில் அமைந்த சுட்டெண்களுடன் ஒப்பிட முடியாது. எனவே, மாகாண ரீதியான மட்டத்திலமைந்த சுட்டெண்களை மாகாணங்களுக்கிடையே அத்துடன் காலத்துடன் ஒப்பிட முடியாத அதேவேளை தேசிய மட்டத்திலான சுட்டெண்களை கால அளவில் மட்டுமே ஒப்பிடமுடியும்.